(ஆ) திருவில்லிபுத்தூர் நகரில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகள் தீ விபத்திற்குள்ளானது குறித்து.

திரு. இரா. தர்மரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டம் திருவில்லிப்புத்தூர் நகரில் 1979 மார்ச் மாதம் 23 அன்று தாழ்த்தப்பட்ட மக்களின் 100க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்தும், பொருள் சேதம் அதிகம் ஏற்பட்டதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவில்லிப்புத்தூர் நகரில் 1979 மார்ச் 23 அன்று பிற்பகல் 1.45 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. இத் தீ விபத்தில் ரூ. 20,750 மதிப்புள்ள 27 வீடுகள் தீக்கிரையாயின. உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ ஏதும் இல்லை. தீ விபத்து செய்தி கிடைத்தவுடன் திருவில்லிப்புத்தூர் மற்றும் இராச பாளையம் தீயணைப்பு நிலையங்களிலிருந்து தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர். 1979 மார்ச் மாதம் 23 அன்று இரவு பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 1979 மார்ச் மாதம் 24 அன்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கினர். குடிசை கருணை மானியத் தொகையாக ரூ. 2,575 பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 5 கிலோ அரிசியும் வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூரில் தீப்பிடித்ததாக டெலிபோன் மூலம் தகவல் வந்தது. நான் நம்முடைய முதல்வர் அவர்களிடமும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் விவரங்களைச் சொன்னேன். உடனடி நடவடிக்கை எடுத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே வாழ்கிற மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், மேற்குத் தொடர்மலைக்கு காய்ந்த விறகுகளை எடுப்பதற்காகப் போவார்கள். தினசரி இரண்டு அல்லது மூன்று ரூபாய்தான் கூலி கிடைக்கும். அவர்களுக்கு மாற்று உடை உடுத்த துணிமணிகள் கிடையாது. அவர்களுடைய துணிமணிகளும் பொருள்களும்

1979 மார்ச் 26] [திரு. இரா.தாமரைக்கனி]

சேதமாகிவிட்டன. உணவுக்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு 5 கிலோ அரிசி கொடுத்ததாகச் சொன்னார்கள். இன்னும் 45 கிலோ அரிசியும் துணிமணிகளும் கொடுத்தால் பேருதவியாக இருக்கும். இப்போது அவர்கள் யாதாம் ஏவாள் எப்படி இருந்தார்களோ அதே போன்று இலையை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இன்றைக்கு இருக்கிற அரசாணைப்படி இந்த மாதிரி வீடு தீப்பற்றிக் கொண்டால் 100 ரூபாயும் 5 கிலோ அரிசியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதிர்பாராத நேரங்களில் தீ விபத்து ஏற்பட்டு சேதம் அதிகமாக இருந்தால் 50 கிலோ அரிசி வரை கொடுக்கப்படுகிறது. 50 கிலோ அரிசி கொடுக்கவேண்டுமென்று அவர் சொன்னபோது பேராசிரியர் அவர்கள் அங்கு கார்ப்பரேஷன் தேர்தல் இல்லையென்று சொன்னார்கள். அவர்கள் வருவதற்கு முன்பு இங்கே படித்தேன். ஒரு லட்சம் பேருக்கு வெளி மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைத் தந்தேன். உறுப்பினர் அவர்கள் கோருகிறபடி கொடுக்கவேண்டுமென்றால் தனி ஜி. ஓ. போட வேண்டும். வருவாய்த்துறையுடன் ஆராய்ந்து செய்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : இங்கே மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசுகிறபோது வேளாண்மைத் துறையினர் பாசன வரிகளை விவசாயிகளிடமிருந்து வசூலிக்க ஜப்தி செய்கிறார்கள், ஆடு மாடுகளைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள் என்ற உண்மைக்கு மாறான தகவல்களைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுத்திருக்கிறார்கள். இது குறிப்பில் இருக்க வேண்டுமா என்று சிந்தனை செய்ய வேண்டும். பத்திரிகையில் அது வேறு விதமாக வந்துவிடும் என்பதால் அதைப் பற்றிக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் ஒரு தகவலைத் தந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே இரண்டுமே சபைக் குறிப்பிலே இருக்கலாம். நீக்கவேண்டிய அவசியம் இல்லை.

(4) தகவல்கள் கோரல் (தொடர்ச்சி.(—

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து— தொடர்ச்சி.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 41 இல் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பல்லாவரம் போன்ற பகுதிகளிலே 28 ஆம் தேதி குவாரி தொழிலாளர்கள் தொழிற் தகராறு சட்டத்தை எரிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று...............